O.S.No.2/2009

17.07.2019

**வா.சா.1 திருப்பதி என்பவர் ஆஜராகி சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**கு.வி தொடர்ச்சி**

என் அப்பா எங்கள் குடும்பநலனில் அக்கரையில்லாமல் அவர் மனம் போல் வாழ்க்கை நடத்தி வந்ததாக நான் என் பிராதிலோ பதில்அறிவிப்பிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். பின்யோசனையின் பேரில் நிரூபன வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் சொல்லியுள்ளேன். என் அப்பா அடமான காலகட்டத்தில் மைனர்களாக இருந்த எங்களுக்கு எதிராக எந்த வகையில் செயல்பட்டு வந்தார் என்பதை குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். 08.10.2001ம் தேதிய அடமானபத்திரத்தின் மூலமாக பிராது 13வது தபசில் சொத்தையும் 12வது அயிட்ட சொத்தில் பாதியையும் அடமானம் வைத்து பெற்ற ரூ.2 லட்சத்தை விவசாய அபிவிருத்திக்காகவும் குடும்பநலனுக்காகவும் தான் செலவு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 31.05.2002ம் தேதிய அடமானபத்திரத்தின் மூலமாக பிராது 9 முதல் 11 இலக்கசொத்தையும் பிராது 12வது இலக்க சொத்தில் பிரிவினை இல்லாத பாதியையும் அடமானம் வைத்து பெற்ற ரூ.2 லட்சத்தை என் அப்பா விவசாய அபிவிருத்திக்காகவும் குடும்பநலனுக்காகவும் தான் செலவு செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா அயிட்டம் 12ல் உள்ள கிணற்றை ஆழப்படுத்தி செம்மைப்படுத்தி அபிவிருத்தி செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா 2 அடமானபத்திர கடன்கள் வாங்கியதை குடும்ப கர்த்தா என்ற முறையில் எங்கள் பொதுகுடும்ப நன்மைக்காகவும் மைனர்கள் நலனுக்காகவும் பயன்படுத்தினார் என்றாலும் குடும்பகர்த்தா என்ற கோதாவில் தான் மேறகண்ட அடமான பத்திரங்களை 31.05.2002ம்

தேதியிட்ட ஒப்பந்தத்தையும் எழுதிக்கொடுத்தார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி 24.04.2008ம் தேதியன்று 2ம் பிரதிவாதியின் வழக்கறிஞரிடமிருந்து 1, 2 பிரதிவாதிகளுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக கண்டு பெற்ற அறிவிப்பை குறித்து 1ம் பிரதிவாதியை சந்தித்து கேட்ட போது 1ம் பிரதிவாதி தான் 2ம் பிரதிவாதியிடம் தொகையை பெற்றதாகவும் அதற்கு ஆதரமாக 2ம் பிரதிவாதி வற்புறுத்தியதன் பேரில் வெற்று பேப்பரில் கையெழுத்திட்டதாகவும் அதனால் அது குறித்து எந்தவிதமான பதிலும் அனுப்ப வேண்டியதில்லை எனக்கூறியதாகவும் அதனால் 3ம் பிரதிவாதி எந்தவிதமான பதிலும் அனுப்பவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தத்திற்காக பகுதிவரவுகளாக 05.05.2008ம் தேதியன்று ரூ.10,000/-மும், 20.05.2008ம் தேதியில் ரூ.10,000/-மும் 24.05.2008ம் தேதியில் ரூ.20,000/-மும் கொடுத்தார் என்றும், அதற்கு என் அப்பா 3ம் பிரதிவாதியின் டைரியில் அவர் கைப்பட ஒப்புதல் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விதமாக என் அப்பாவிற்கு 3ம் பிரதிவாதி மேற்படி ஒப்பந்த வகைக்கு பகுதிவரவாக மொத்தம் ரூ.2,40,000/-த்தை செலுத்தியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 14.04.2008ம் தேதிய ஒப்பந்தத்தை பற்றி என் அப்பாவிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை. 2 அடமானங்களை பற்றி என் அப்பாவிடம் கேட்டேன் என கூறிய நான் 14.04.2008ம் தேதிய ஒப்பந்தத்தை பற்றி கேட்காததற்கு என்ன காரணம் என்றால் காரணம் எதுவுமில்லை. அசல் வழக்கு எண்.172/08 வழக்கிற்கு பிறகு தான் 2 அடமான பத்திரங்களை பற்றி என் அப்பாவிடம் கேட்டுத்தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அவ்வாறு அடமானத்தை பற்றி கேட்டுத்தெரிந்து கொண்ட நான் 14.04.2008ம் தேதிய ஒப்பந்தத்தை பற்றி கேட்டுத்தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தப்படி 3ம் பிரதிவாதிக்கு நானும் என் அப்பாவும் கிரையம்

செய்து கொடுக்க மறுத்ததால் தான் 3ம் பிரதிவாதி அ.வ.எண்.172/08ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. என் அப்பாவிற்கும் 3ம் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தப்படி என் அப்பா குடும்ப கர்த்தா என்ற முறையில் ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டார் என்றாலும் அந்த ஒப்பந்தம் சட்டப்படி செல்லத்தக்க ஒப்பந்தம் என்றாலும் அந்த ஒப்பந்தம் என்னையும் கட்டுப்படுத்தக்கூடியது என்பதால் அது பற்றி நான் கேள்விகேட்க முடியாது என்றால் சரியல்ல. வைகாசி] மாதத்திற்குள் கிரையத்தை முடிக்குமாறு 3ம் பிரதிவாதி என் அப்பாவிடம் கேட்டதற்கு என் அப்பா தன் பிள்ளைகள் படிப்பிற்காக வெளியூரில் இருப்பதாகவும் அவர்கள் வந்த பிறகு கேட்டு சொல்வதாகவும் சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி வழக்கறிஞரிடமிருந்து 3ம் பிரதிவாதிக்கு வந்த வழக்கு சம்பந்தமான அறிவிப்பை பெற்றுக்கொண்டதில் என் அப்பாவை சந்தித்து அது பற்றி கேட்ட போது என் அப்பா எங்களை கலந்துகொண்டு பத்திரம் எழுதிக்கொடுப்பதாக சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் பிறகு 28.06.2008ல் 3ம் பிரதிவாதி என் அப்பாவை சந்தித்து 2ம் பிரதிவாதியுடன் பிரச்சனையை தீர்த்துவிட்டீர்களா என கேட்டதற்கு என் அப்பா தற்போது அந்த இடங்களுக்கு கிராக்கி இருப்பதாகவும் அதனால் ரூ.15 லட்சம் கொடுக்கவேண்டும் என கேட்டதற்கு 3ம் பிரதிவாதி மறுப்பு தெரிவித்ததற்கு என் அப்பா 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து விடுவோம் என சொல்லி பயமுறுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பின் விசாரணையில் தான் என் அப்பா நான் 2ம் பிரதிவாதி அனைவரும் கூட்டு சேர்ந்து அதிகமான தொகையை 3ம் பிரதிவாதியிடமிருந்து பெறுவதற்காக தான் 2ம் பிரதிவாதியுடன் செய்து கொண்டதாக ஒரு ஒப்பந்தத்தை உற்பத்தி செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 04.02.2011ம் தேதியில் 2ம் பிரதிவாதியுடன் செய்து கொண்டதாக சொல்லப்படும் ஒப்பந்தத்தை பற்றி 3ம் பிரதிவாதியிடம் எதுவும் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஒப்பந்தம் 3ம்

பிரதிவாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் அப்பா எந்த காலத்திலும் சிட்பண்டு தொழில் செய்துவரவில்லை என்றாலும் சரியல்ல. என் அப்பா எப்போது எவ்வளவு காலம் சிட்பண்டு தொழில் நடத்திவந்தார் என்பது எனக்கு தெரியாது. என் அப்பா தற்போது விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். என் அப்பா 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரங்கள் மற்றும் கிரைய ஒப்பந்தங்கள் பற்றி ஆரம்பத்திலிருந்தே எனக்கு நன்கு தெரியும் என்றாலும் இவ்வழக்கிற்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிராது தபசில் 3, 7, 8, 15 முதல் 18, 23 முதல் 25 இலக்க சொத்துக்களில் பிரிவினை இல்லாத பாகமாக அச்சொத்துக்களை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். அதன்படி மேற்படி சொத்துக்களில் வேறு பங்குதாரர்களும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த பங்குதாரர்களை இவ்வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த பங்குதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் நான் பாகம் கேட்கமுடியாது என்றால் சரிதான். நான் உண்மையில் பாகம் கேட்கக்கூடிய வழக்காக தாக்கல் செய்திருந்தால் அந்த பங்குதாரர்களையும் தரப்பினர்களாக சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் என் அப்பா, 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து 14.04.2008ம் தேதிய ஒப்பந்தப்படி 3ம் பிரதிவாதிக்கு எதிராக மோசடியாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் 04.11.2007ம் தேதிய ஒப்பந்தத்தை வாதிகளும் என் அப்பாவும் 2ம் பிரதிவாதியும் சேர்ந்து மோசடியாக பின்னிட்டு தயார் செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.172/2008 வழக்கிற்கு பின்னர் பாகம் என் அப்பாவிடம் கேட்டோம். நேரடியாக பலமுறை கேட்டோம். மேற்படி வழக்கிற்கு பின்னர் சொத்து போய்விடும் என தெரிந்து பாகம் கேட்டேன். பாகம் கேட்டு அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. கடைசியாக நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என் அப்பாவிடம் பாகம் கேட்டேன். நான் என் அப்பாவிடம் பாகம் கேட்டதாக சொல்வது 3ம் பிரதிவாதியை

மோசம் செய்வதற்காக கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி எப்போது வேலைக்கு போனார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் 2010ல் வேலைக்கு போனேன். நான் பொதுகுடும்ப அங்கத்தினர் என்ற முறையில் என் அப்பாவுடன் கூட்டாக உழைத்து பொதுகுடும்ப சொத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு தான் மேற்படிப்பு படித்ததாக இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுகுடும்ப சொத்திலிருந்து நல்ல வருமானம் வந்தது என்பதால் 3ம் பிரதிவாதியிடம் சொத்தை அடமானம் வைத்து கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை என நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் Nonjoinder of necessary parties என்ற தோஷத்திற்குட்பட்டு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பிராது தபசில் கண்ட விவசாய சொத்துக்கள் கிணற்றுடன் கூடிய நிலங்களில் இருந்து நல்ல வருமானம் வந்ததாக சொல்வது இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 அடமான பத்திரங்களும் 31.05.2002 மற்றும் 14.04.2008 ஒப்பந்தங்களும் எழுதப்பட்ட போதே எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் 1ம் பிரதிவாதிக்குரிய பிரிவினை இல்லாத 1/3 பாகம் சொத்தை பொறுத்துமட்டும் 1ம் பிரதிவாதி வில்லங்கம் செய்ய உரிமையுள்ளது என்றும் எங்களுக்குரிய 2/3 பாகத்தை பொறுத்து வில்லங்கம் செய்ய உரிமையுள்ளது என்று நான் சொல்லியிருப்பது பொய் என்றால் சரியல்ல. நான் 3ம் பிரதிவாதியுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் என் தகப்பனார் பெற்ற கடன் தொகையை நாங்கள் செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுடைய பங்கை என் அப்பாவிற்கு கிரையம் செய்ய எந்த வித அதிகாரமும் கொடுக்கவில்லை. அவ்வாறு செய்திருந்தாலும் அது எங்களை கட்டுப்படுத்தாது என்று பொய் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளும் என் அப்பாவும் அடங்கிய பொதுகுடும்பத்திற்கு கர்த்தா மேனேஜராக 2 அடமானமும், 31.05.2002ம்

தேதிய ஒப்பந்தம், 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தம் ஆகியவற்றை அப்போது மைனர்களாக இருந்த எங்களையும் கட்டுப்படுத்தி என் அப்பா எழுதிக்கொடுப்பதற்கு என் அப்பாவிற்கு உரிமை உண்டு என்றும் அவ்வாறு எழுதிக்கொடுத்த ஆவணங்கள் எங்களையும் கட்டுப்படுத்தும் என்றாலும் நாங்கள் 14.04.2008ம் தேதிய கிரைய ஒப்பந்தப்படி நாங்களும் என் அப்பாவுடன் சேர்ந்து 3ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றாலும் எனவே அந்த சொத்துக்களை பொறுத்து நாங்கள் பாகம் கோரமுடியாது என்றாலும் அந்த சொத்தை பொறுத்து எனக்கு பாகம் கிடைக்காது என்று சொன்னாலும் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.